# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்

## சத்குரு ஜக்கி வாசுதேவ்



**"சென்ற வருடம் என் மகனை வெளியூர் கல்லூரியில் சேர்த்தேன். முன்பெல்லாம் தினம் காலையில் குளித்து சுலோகம் சொல்பவன், இப்போது சாமி அறையையே அலட்சியம் செய்கிறான். ஒரு வருட ஹாஸ்டல் வாழ்க்கை அவன் பழக்கவழக்கங்களை அடியோடு மாற்றிவிட்டதைக் கண்டு அதிர்கிறேன். அவனைத் திருத்துவது எப்படி?"**

ஏதோ ஒன்றை எதற்குப் பழக்கமாக்கிக்கொள்கிறோம்? தனிக் கவனம் செலுத்தாமலேயே ஒரு செயல் நடப்பதால், வாழ்க்கை முறை சற்று எளிதாகிறது. சுமை சற்று குறைகிறது. அவ்வளவு தானே!

அவரவர் வளரும் சூழ்நிலையைப் பொறுத்துத்தான் பக்குவமற்ற வயதில் சேகரித்த பழக்கங்கள் தொடர்கின்றன. அம்மாவையும் அப்பாவையும் இறுகப் பற்றிக்கொண்டு வாழும் குழந்தையால் தன் பழக்கங்களைக் கைவிட முடியாமல் போகிறது. வெளி உலகைத் தரிசிக்காமல், அறிமுகமற்றவர்களிடம் நெருங்காமல், புதிய அனுபவங்களை எதிர்கொள்ளாமல் வளர்பவர்கள் தங்கள் பழக்கங்களிலிருந்து விலகாமல் சாரமற்ற வாழ்க்கையையே வாழ்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்கும் நட்பு, நேரும் வாழ்க்கை என எல்லாமே எந்த வித்தியாசமும் இல்லாமல் அமைந்துவிடுகிறது.



கூட்டுக்குள் சிறை படாமல், பூமியின் விதவிதமான முகங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு பெற்றவர்களோ, பழக்கங்கள் என்ற அடிமைத்தனத்திலிருந்து விரைவில் விடுபடுகிறார்கள். பல திசைகளில் நடைபோட்டு உலகின் வீச்சை அளக்க முற்படுபவர்கள்தாம் வாழ்க்கையின் பல பரிமாணங்களை அனுபவரீதியாகப் பெறுகிறார்கள்.

கவனம் ஏதுமின்றி, ஒரு சடங்காக உங்கள் மகன் சுலோகங்களைச் சொல்லி வந்ததினால், அந்தப் பழக்கம் விட்டுப்போயிற்று. ஒருவிதத்தில் இது நல்லது. முழுமையான கவனத்துடன் அவன் எதை அணுகுகிறானோ, அதுவே அவனுக்கு உண்மையான அனுபவத்தின் பரவசத்தைத் தரும்.

**"நல்ல பழக்கங்கள் இருப்பவரைக்கூட கடவுள் பல விதங்களில் சோதிக்கிறார். இருக்கும் நல்ல பழக்கங்களையும் ஏன் கைவிட வேண்டும்?"**

நீங்கள் நல்லவராகவே தொடர்கிறீர்களா என்று சரிபார்க்க மறுபடி மறுபடி சோதித்துப் பார்க்கும் அளவு கடவுள் என்ன முட்டாளா? உண்மையில் உங்கள் குணங்கள் பிடித்துப்போனால், அவர் உங்களைக் கொண்டாட வேண்டுமல்லவா? அந்த அளவுகூட புரிந்துகொள்ள முடியாதவரை ஏன் கடவுளாக வைத்திருக்கிறீர்கள்?

கடவுளுக்காக வாழ்வதை முதலில் நிறுத்துங்கள். உங்களுக்காக வாழுங்கள். நீங்கள் செய்வது என்ன, அதன் பின்விளைவு என்ன என்று மட்டும் கவனித்து ஒவ்வொரு செயல் பற்றியும் முடிவெடுங்கள். நீங்கள் உறுதியானவராக இருந்தால், கடவுள் உங்களை என்ன செய்ய முடியும்?

ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள். பழக்கம் என்று வந்துவிட்டாலே, அதில் நல்லது என்று எதுவும் கிடையாது. பழக்கத்தின் அடிப்படையில் நிகழும் வாழ்க்கையில் ஆழமான அனுபவங்கள் கிடைக்காது. வாழ்க்கையின் உண்மையான ருசி தெரியாமலே போய்விடும்.



கல்லூரி விரிவுரையாளராக இருந்த பெண்மணி ஒரு புதிய கருவியை வாங்கினார். குறிப்புகளைக்கொண்டு, அதன் பாகங்களை இணைக்கப் பார்த்தார். எத்தனை முயன்றும், கருவியை முழுமையாகப் பொருத்த முடியவில்லை. வெறுத்துப்போய் அப்படியே குவியலாக அதைப் போட்டுவிட்டுப் போய்விட்டார். வாங்கிய கடையில் விசாரித்தார். குறிப்புகளின் எண் வரிசை தவறுதலாக அச்சாகிவிட்டதாக அவர்கள் மன்னிப்பு கேட்டார்கள். வீட்டுக்கு வந்து பார்த்தால், ஆச்சர்யம் காத்திருந்தது. அக்கருவி பொருத்தப்பட்டு இயங்கிக் கொண்டு இருந்தது.

"யார் இதைப் பொருத்தியது?" என்று அவர் வியந்தார்.

"நான்தான்" என்றாள், பணிப்பெண்.

"உனக்கு எழுதப் படிக்கக்கூடத் தெரியாதே!" என்று ஆச்சர்யப்பட்டார் விரிவுரையாளர்.

உண்மையில் அதுதான் உதவியிருந்தது. படிக்கத் தெரியாததால், குறிப்புகளை வைத்துக்கொண்டு அல்லாடாமல், சில முயற்சிகளில் பணிப்பெண் அதை சரிவரப் பொருத்திவிட்டாள்.

**ப**ழக்கம் மூளையை ஒரே திசையில் செலுத்தும். விழிப்பு உணர்வுதான் சரியான திசையைத் தேர்ந்தெடுக்கும்.

சிலர் வாகனங்களையே கவனத்தை ஊன்றாமல் பழக்கத்தின் அடிப்படையில் செலுத்துவார்கள். அந்தச் செயலில் கிடைக்கக்கூடிய முழுமையான ஆனந்தத்தை அவர்கள் நுகர்வதில்லை. பல் தேய்ப்பதோ, குளிப்பதோ, பேனாவைத் திறப்பதோ, கையெழுத்துப் போடுவதோ எதுவானாலும், அதை உரிய கவனத்துடன் செய்து பாருங்கள். திடீரென்று ஒவ்வோர் அசைவுக்கும் புது சக்தி பிறப்பதை உணர்வீர்கள். உள்ளே இழுத்து வெளியே விடும் ஒவ்வொரு மூச்சையும் கவனித்துச் செய்து பாருங்கள். வாழ்க்கையின் சக்தியே வீறு கொண்டுவிடும்.

போதிய கவனமின்றி வளர்த்துக்கொண்டுள்ள எந்தப் பழக்கமும் உங்களுக்கு நல்லதல்ல. வாழ்க்கையை ஒவ்வொரு தருணமும் விழிப்பு உணர்வுடன் கவனியுங்கள். ஆனந்தம் பெருகும். வாழ்க்கை அமுதமாய் முழுமை பெறும்!

**... அமுதம் அருந்தினோம்**